செய்தி இதழாகப் பதிவு பெற்றது

RECEIVED 7-8 Periodicals Division Library

# தந்தி

இல: 1106 | 1970 ஆகஸ்ட் 12 | புதன்கிழமை | விலை சதம் 5

## புறக்கோட்டையில், தடை செய்யப்பட்ட

# இறக்குமதி ஜவுளி கைப்பற்றப்பட்டது

**புறக்கோட்டையிலுள்ள ஒரு கடையில் நேற்று பிற்பகல் திடீர் சோதனைக் குழு நடத்திய சோதனையின் போது தடைசெய்யப்பட்ட பல ரக ஜவுளி வகைகள் கைப்பற்றப்பட்டன.**

27 நைலக்ஸ், வொயில், டாக்கா சேலைகளும், 20 யார் டெட்ரான் சூட் துணியும், தலா 35 முதல் 40 யார் கொண்ட 7 ரோல் ஜப்பான் டபேட்டாவுமே அவைகள்.

இவை சுங்க அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டதுடன், பிரஸ்தாப கடையின் முதலாளி எனப்படுபவர் கைது செய்யப்பட்டார். அவர் 1000 ரூபா பிணையில் விடுவிக்கப்பட்டார்.

ஆகஸ்ட் 14-ம் திகதி சுங்கத் தடுப்பு அதிகாரி முன் ஆஜராகுமாறு அவருக்கு உத்தரவிடப்பட்டது.

இன்ஸ்பெக்டர் இக்னேஷியஸ் பெரேரா தலைமையில் இச் சோதனை நடத்தப்பட்டது.

உதவி தடுப்பு அதிகாரி திரு. ஏ. திஸ்ஸநாயகா மேல் விசாரணை நடத்தி வருகிறார். (ய)

## தீப்பெட்டி கைத்தொழில்

தீப்பெட்டி உற்பத்தியை குடிசைக் கைத்தொழிலாக நடத்த அனுமதிக்கும் திட்டம் ஒன்றை அரசாங்கம் தயாரித்து வருகின்றது. தீப்பெட்டித் தட்டுப்பாட்டை நீக்கவும் உற்பத்தியில் போட்டியை ஏற்படுத்தவுமே அரசாங்கம் இந் நடவடிக்கையை மேற்கொள்கின்றது. (ம)

## மீனாட்சி



என்னுங்க, அகட்டுப் பகட்டை அகற்றச் சொல்கிறாரே நிதி அமைச்சர்!

அப்பிடியென்றால் முக்காலே மூன்று வீசம் இலங்கை உற்பத்திப் புடவைகளுக்கும் மார்க்கட் இருக்காதே!

## தண்ணீர் தூங்கியில் ஏறியவர் அமைச்சரைக் கண்டு இறங்கினர்

சாகும்வரை உண்ணாவிரதம் மேற்கொண்டு முகத்துவாரம் தண்ணீர்த் தூங்கி மீது ஏறிய ஒருவர், மீன்பிடித்துறை அமைச்சர் திரு. ஜோர்ஜ் ராஜபக்ச அங்குவந்தவுடன் பூமியில் இறங்கினர்.


முகத்துவாரத்தில் உள்ள மீன்பிடிக் கூட்டுத்தாபன விற்பனைப் பிரிவு ஊழியர் ஒருவர் அக் கூட்டுத்தாபன வளவில் உள்ள தண்ணீர்த் தூங்கியின் மீது ஏறினர்.

ஊழியர்களின் அடிப்படைச் சம்பளத்தை ரூபா 125 லிருந்து ரூபா 180 ஆகக் கூட்ட, மீன்பிடிக் கூட்டுத்தாபனம் தாமதப்படுத்துவதை எதிர்த்தே இந்த ஊழியர் தண்ணீர்த் தூங்கிமீது உண்ணாவிரதம் இருக்கத் தீர்மானித்தார்.

இவருக்கு ஆதரவளித்து பல தொழிலாளர் வெளிநடப்புச் செய்தனர்.

இந்த வேலைநிறுத்தத்தால் பல தொன் நிறையுள்ள மீன்கள் கெட்டுப்போய்விட்டதாக ஒரு தொழிலாளி கூறினர்.

தண்ணீர்த் தூங்கியின் விளிம்பில் நின்று அந்த ஊழியர் திகிலூட்டுவதை வலப்புறமுள்ள படத்தில் காணலாம். (ய)



## பாக் தொடர்பை கண்டிக்கும் பிரேரணை தோல்வி

புதுடில்லி, ஆக. 12

பாகிஸ்தானுடனான ராஜரீக தொடர்புகளைத் துண்டிக்க வேண்டும் என்று ஜனசங்கக்கட்சியினால் கொண்டுவரப்பட்ட பிரேரணை இந்திய நாடாளுமன்றத்தில் நிராகரிக்கப்பட்டது. (க)

## கூட்டுத்தாபனத்தின் மூலம் ரூபா 10 கோடி கிடைக்கும்

நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்ட இரத்தினக் கல் கூட்டுத்தாபனம் விரைவில் நிறுவப்படும் எனத் தெரிகிறது. இதனால் ஆண்டு ஒன்றுக்கு 10 கோடி ரூபா அரசாங்கத்துக்கு மிச்சம் கிடைக்கும்.

விரைவில் கூட்டுத் தாபனம் ஒன்றை நிறுவும் மசோதா நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

இரத்தினக் கல் வர்த்தகத்தில் தனிப்பட்டவர்களின் ஏகபோக உரிமையை முறியடிக்கவும், ஆயிரக்கணக்கான இரத்தினக் கல் தோண்டுபவர்களுக்கு நல்வாழ்வு கிடைக்கவும் இதன் மூலம் வழி ஏற்படும்.

கற்களைத் தோண்டி எடுத்தல், அவற்றை வெட்டுதல், சுத்தம் செய்தல், உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் அவற்றை விற்பனை செய்தல், விலை நிர்ணயித்தல் ஆகிய அனைத்தும் கூட்டுத்தாபனத்தின் மூலம் செய்யப்படும்.

ஏற்றுமதி முழுவதையும் கூட்டுத்தாபனமே மேற்கொள்ளும்.

இரத்தினக் கல் தொழிலில் பயிற்சி அளிக்கவும் ஏற்பாடு செய்யப்படும்.

இத்திட்டத்திற்கு தெஹியோவிட்ட எம். பி. திரு. தனபால வீரசேகர மூலகாரணமாவார் எனக் கூறப்பட்டது. (ய)

## தொழிற்சாலை

மோட்டார் உதிரிப்பாகங்களைத் தயாரிப்பதற்கான தொழிற்சாலை ஒன்று செக்கோஸ்லோவேகியாவின் உதவியுடன் இலங்கையில் நிறுவப்படஉள்ளது.

இது சம்பந்தமாக, கைத்தொழில் ஆலோசனைக் குமிட்டி தெரிவித்த சிபார்சுகளை கைத்தொழில் விஞ்ஞான ஆராய்ச்சி அமைச்சர் திரு. ரி. பி. சுபசிங்கா ஏற்றுக்கொண்டுள்ளார். (ம)

## செப்டம்பர் 9—க்கு முன்...

புதுடில்லி, ஆக. 12

பீகாரிலுள்ள நிலச்சுவாந்தார்கள் வருகிற செப்டம்பர் 9-ம் திகதிக்கு முன் படுகொலை செய்யப்படுவார்கள் என நக்ஸல்பாரி கம்யூனிஸ்டுகள் பயமுறுத்தல் கடிதங்களை அனுப்பி இருக்கிறார்கள்.

மேற்கு வங்காளத்தில் நில ஆக்கிரமிப்பு கம்யூனிஸ்டுகள் 2 நிலச்சுவாந்தாரர்களை கொன்றனர். (ய)

## விசேஷ பஸ்கள்

கொழும்பு, ஆக. 12

கண்டி எஸல பெரஹரா விற்குச் செல்லும் யாத்திரிகளின் வசதியை முன்னிட்டு விசேஷ ஒழுங்குகளைச் செய்ய இலங்கைப் போக்குவரத்துச் சபை முன்வந்துள்ளது.

மத்திய மாகாணத்தைச் சேர்ந்த புகையிரதச் சேவையற்ற பகுதிகளுக்கெல்லாம் வழமையாக சேவையிலீடுபடும் பஸ்களை விட, மேலும் விசேஷ பஸ்கள் சேவையில் விடப்பட்டுள்ளன. (க-7)

## முத்திரையில் வெற்றி தினம்

கொழும்பு, ஆக. 12

காலஞ்சென்ற பிரதமர் திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவின் சிரார்த்த தினத்தன்று வெளியிடப்படவிருக்கும் புதிய பத்துச் சத முத்திரையில் ஜூன் மாதம் 14ம் திகதி நடைபெற்ற மக்கள் வெற்றி தினத்தைச் சித்திரிக்கும் காட்சி ஒன்றும் இடம்பெறவுள்ளது.

அத்துடன் காலஞ்சென்ற பிரதமர் பண்டாரநாயக்காவின் உருவப்படமும் இம் முத்திரையில் அடங்கும். (ஜ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்து மாதங்களுக்குள் மணவாழ்வு பாழ்

# மனைவியின் துர்நடத்தை பின்னரே தெரிந்தது!

## விவாகரத்துக்கு நீதவான் அனுமதி அளித்தார்

"எங்கள் திருமணத்தின் பின்னரே என் மனைவியின் துர்நடத்தை எனக்குத் தெரியவந்தது. இதனால் ஐந்து மாதகால மணவாழ்வு பாழாகியது" என்று தெரிவித்த ஒருவருக்கு விவாகரத்து அனுமதி வழங்கினார் கண்டி மாவட்ட பதில் நீதவான் திரு. ஜி. மதநாயக்கா.

புலத்கொஹுபிட்டிய அம்பெயரத்ன என்பவர் தனது மனைவியான பிஸோமெனிக்காவிடம் விவாகரத்து கோரி வழக்குத் தொடர்ந்திருந்தார். மனைவி தன்னைக் காரணமின்றிக் கைவிட்டதாகவும், ஜே. எம். செனவிரத்ன என்பவருடன் துர்நடத்தையில் ஈடுபட்டதாகவும் குறிப்பிட்டு இவர் விவாகரத்து வழக்குத் தொடர்ந்திருந்தார்.

இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது மனுதாரின் வழக்கறிஞர் எஸ். எச். எம். மஹ்ரூப் தனது கட்சிக்காரர் தனது மனுவில் குறிப்பிட்டிருந்த முதலாவது குற்றச்சாட்டையே விசாரணை செய்யும்படி கோருகிறார் என்றும், இரண்டாவது எதிர் மனுதாரரை விசாரணைக்கு அழைக்க அவர் விரும்பவில்லை எனவும் தெரிவித்தார்.

மனுதார் தனது சாட்சியத்தில் கூறியதாவது:- "பிஸோமெனிக்காவை 1967-ம் ஆண்டு ஆகஸ்ட் 21-ம் திகதி திருமணம் செய்தேன். எனது தாய் வீட்டிற்கு அவளை அழைத்துச் சென்று குடித்தனம் நடத்தினேன். 1968-ம் ஆண்டு ஜனவரி மாதத்தில்தான் அவளுடைய துர்நடத்தை எனக்குத் தெரியவந்தது.

"எனது தாய் அவளுக்குப் புத்திமதி கூறினார். 1968-ம் ஆண்டு பெப்ருவரி 6-ம் திகதி எனது மனைவி என்னைவிட்டுப் பிரிந்துசென்றாள். பின்னர் என்னிடம் அவள் வரவே இல்லை.

"அவளுடைய துர்நடத்தை பற்றி தெரியவந்த பின்னர் அவள் மீண்டும் என்னுடன் வந்து இல்லறம் நடத்துவது என்பது இயலாத காரணம் என்பதை நான் உணர்ந்த போதிலும் அவளை மீண்டும் என்னுடன் சேர்த்துக் கொள்ள முயன்றேன். ஆனால் எவ்வித பயனும் ஏற்படவில்லை. எங்களுக்கு குழந்தை எதுவும் பிறக்கவில்லை" என்றார்.

எதிர்மனுதார் நீதிமன்றத்தில் பிரசன்னமாய் இருந்தபோதிலும் குற்றச்சாட்டுகள் எதற்குமே பதில் தரவில்லை.

விவாகரத்துக்கு அனுமதி அளித்தார் நீதவான். (ம)

## அமெரிக்க பெண்கள் வெற்றி கொண்டாடினர்

வாஷிங்டன், ஆக. 11

அமெரிக்காவின் எல்லா ராஜ்யங்களிலும் பெண்ணுக்கு சம உரிமை வழங்கப்படவேண்டும் என அமெரிக்க அரசியலமைப்பில் கொண்டுவரப்பட்ட திருத்தத்தை அமெரிக்க நாடாளுமன்றம் அங்கீகரித்தது.

அதேவேளையில், நியூயோர்க்கின் பொது இடங்களில் பெண்களுக்கு எதிராக பாகுபாடு காட்டப்படுவதை தடை செய்யும் மசோதாவில் நியூயோர்க் மேயர் ஜோன் லின்ட்சே கையொப்பமிட்டார்.

இதன் மூலம் 174 வருடங்களில் நேற்று இரவே முதல் தடவையாக நியூயோர்க் மதுபான விற்பனை நிலையம் ஒன்றில் பெண்கள் குடிக்க முடிந்தது. தங்களுக்குக் கிடைத்த வெற்றியை அமெரிக்கப் பெண்கள் கொண்டாடினர். (ம)

### எச்சரிக்கை

ஊழலை ஒழிக்க முடியாததால் புரட்சியை எதிர்நோக்க வேண்டிய நிலை ஜனாதிபதி சுஹார்ட்டோவின் அரசாங்கத்துக்கு ஏற்படும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

## தாய் மரணத்தில் மர்மம் என மகள் முறைப்பாடு

திருமதி பட்ரிக்ஸ் சந்திரசேகரம் என்பவரின் பூதவுடலை மீண்டும் தோண்டி எடுக்க அனுமதி கோரி கொட்டாஞ்சேனைப் பொலீசார் நீதிமன்றத்துக்கு மனுச் செய்தனர்.

அன்னாரின் மரணத்தில் மர்மம் இருக்கிறது என காலஞ்சென்றவரின் மகளான திருமதி ஈ. எம். பெருமாள் புகார் செய்ததையடுத்தே மேற்கண்டவாறு பொலீசார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இது சம்பந்தமாக மருதானை நர்ஸிங் ஹோமைச் சேர்ந்த டாக்டர் எம். எப். கலீலை ஆகஸ்ட் 13 திகதி நீதிமன்றத்தில் ஆஜராகும்படி சம்மன்ஸ் அனுப்பும்படி கொழும்பு மேலதிக நீதவான் திரு. நந்தா விஜயசேகரா உத்தரவிட்டார்.

திருமதி பெருமாள் பொலீசாருக்கு தெரிவித்துள்ள முறைப்பாட்டில் தனது தாய் கடந்த 6ம் திகதி மேற்படி நர்ஸிங் ஹோமில் மரணமானதாகத் தெரிவித்துள்ளார்.

லண்டனிலுள்ள தனது சகோதரன் செட்டஸ் சந்திரசேகரா வந்த பின்னர் 10ம் திகதி தாயாரின் பூதவுடலைத் தான் அடக்கம் செய்ய விரும்பியதாகவும், ஆனால் தனது தாயார் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்படுவதன் முன்னர் தங்கியிருந்த வீட்டுக்காரர் மரணச் சடங்கை 8ம் திகதியே நடத்தி முடித்து விட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்படுவதற்கு முன்னர் தனது தாயார் அந்த வீட்டுக்காரரினால் தாக்கப்பட்டதாகத் தனக்கு தகவல் கிடைத்திருப்பதாலும், பூதவுடல் அவசரமாக அடக்கம் செய்யப்பட்டதாலும் தாயாரின் மரணத்தில் மர்மம் இருப்பதாகத் தான் சந்தேகப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

தாயாரின் பூதவுடலை மீண்டும் தோண்டி எடுத்து பிரேத பரிசோதனை நடத்த வேண்டும் என அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுபற்றிப் பொலீசார் கருத்துத் தெரிவிக்கையில், "காலஞ்சென்றவர் ஜுலை 27ம் திகதி நர்ஸிங் ஹோமில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்று டாக்டர் கலீல் தெரிவித்துள்ளார். நோய் காரணமாக அவர் சிகிச்சை பெற்று வந்தபோது டாக்டர் ஜீ. ஆர். ஹன்டி, டாக்டர் பீ. ஆர். அந்தனிஸ், டாக்டர் எஸ். ஆனந்தராஜா ஆகிய நிபுணர்களும் அவரை வந்து பார்த்திருக்கிறார்கள். அவர் மரணத்தையிட்டு நான் சந்தேகப்படவில்லை என்று தெரிவித்துள்ளார்" என்று குறிப்பிட்டனர். (ம)

### துறைநீலாவணை

திரு. பி. சித்திரைவேலு, 6-ம் வட்டாரம் துறைநீலாவணை, கல்முனை என்ற விலாசத்தில் "தினபதி," "தந்தி," "ராதா," "சிந்தாமணி," "சன்," "வீக்கெண்ட்" இதர சுயாதீன பத்திரிகா சமாஜத்தாரால் வெளியிடப்படும் சகல பிரசுரங்களையும் பெற்றுக் கொள்ளும்படி எமது வாசக நேயர்களை அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

விநியோக மேலாளர்.

## கொத்மலை ஓயாவில் ஒரு பெண்ணின் முண்டம்!

நாவலப்பிட்டி, ஆக. 11

தலையும் கைகளும் அரியப்பட்ட நிலையில் கொத்மலை ஓயாவில் ஒரு பெண்ணுடல் கிடக்கக் கண்டு பிடிக்கப்பட்டது.

கொத்மலை நவங்கம கிராம சேவகர் திரு. ஏ. ஜீ. நாவலகேயும் கிராம வாசிகளும் சேர்ந்து கண்டெடுத்த அவ்வுடல் சுமார் 25 வயது மதிக்கத்தக்க பெண்ணுடையது என்று கூறப்படுகிறது.

கொலை செய்யப்பட்டு மேற்படி ஓயாவில் அவ்வுடல் வீசப்பட்டிருக்கும் என்றும் அது நீரால் அடித்துக் கொண்டு வரப்பட்டிருக்குமென்றும் நம்பப்படுகிறது.

திஸ்பனை கோறளை திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. எச். ஜீ. தசநாயக்கா தீர்ப்பளிப்பதை ஒத்தி வைத்தார். புசல்லாவ பொலீசார் புலன் விசாரணை செய்துவருகின்றனர்.


### அகட்டுப் பகட்டை ஒழிக்கவும்

மேலேயுள்ள பகட்டுகளை எடுத்துவிட்டால் உள்ளூர் உற்பத்திப் பொருள்களின் விலைகளைப் பெருமளவில் குறைத்துவிடலாம். இது நிதி அமைச்சர் டாக்டர் என். எம். பெரேரா அவர்களின் ஆலோசனையாகும். அதாவது சவர்க்காரம், பவுடர், சப்பாத்து, ஷேர்ட் முதலியவைகளை அலங்கரிப்பதற்காக மூட்டப்படும் கிலிட்டுக் கடதாசிகள், தகரங்கள், பெட்டிகள் முதலியவைகளை இல்லாமற் செய்துவிட்டால், உள்ளே உள்ள பொருள்களின் விலைகள் குறைந்துவிடும் என்பதுதான் அவரது கருத்தாகும். ஆம், ஒரு நல்ல பவுடர் டின்னை எடுங்கள். அத்தகர டின்னின் விலை ஏறத்தாழ ஒரு ரூபாய் இருக்கும். எனவே பவுடரின் விலையை ஒரு ரூபாய் கூட்டித்தானே வைக்கவேண்டும். ஆகவேதான் அகட்டுப்பகட்டை அகற்றிப் பொருள்களின் விலையைக் குறைக்குமாறு டாக்டர் அவர்கள் ஆலோசனை கூறியுள்ளார். சிலுசிலுப்பு யாருக்குத் தேவை? புண்ணாரம்தானே வேண்டும்.

தந்தி


## கொலை 2: தற்கொலை 1 நீதவான் ஸ்தல விசாரணை

திருகோணமலை, ஆக. 11

குடும்பத் தகராறு காரணமாக மனைவியையும் மாமியாரையும் கொலை செய்துவிட்டு கணவனும் தற்கொலை செய்து கொண்ட சம்பவம் குறித்து திருகோணமலை மாஜிஸ்திரேட் திரு. டி. சி. டபிள்யு. விக்ரமசேகரா ஸ்தல விசாரணை நடத்தினார்.

மனைவியையும் மாமியாரையும் கொல்ல மண்வெட்டி, கத்தி, தடி முதலியவற்றை பயன் படுத்தியதாகக் கூறப்படும் புஞ்சி பண்டா என்னும் இளம் விவசாயி, தன்னைக் கொல்ல ஒரு சிறு போத்தலில் இருந்த நஞ்சுத் திராவகத்தைப் பயன்படுத்தினார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

இறந்தவர்களின் விபரம் வருமாறு:- பிரேமாவதி, 25 வயது, ஹீன்மெனிக்கா, 50 வயது.

புஞ்சிபண்டாவைப் பிரிந்து பிரேமாவதி, வேறொரு ஆணுடன் நுவரெலியாவில் வசித்து வந்தார் என்றும், சம்பவ தினத்துக்கு முந்திய நாள்தான், தனது தோட்டத்தைப் பார்ப்பதற்காக பிரேமாவதி முள்ளிப்பொத்தானை வந்தார் என்றும் வெளியானது.

மீண்டும் நுவரெலியா செல்ல பிரேமாவதி முயன்ற பொழுதே புஞ்சிபண்டா அவரைத் தாக்கினார் என்றும் மகளின் உதவிக்கு வந்த தாயாரும் பின்னர் குரூரமாக தாக்கப்பட்டார் என்றும் தெரிய வந்துள்ளது.

பிரேமாவதி, ஹீன்மெனிக்கா ஆகியோரின் மரணத்தை கொலைச் சம்பவம் என்று தீர்ப்பு அளித்த நீதவான், புஞ்சிபண்டாவின் மரணத்தைத் தற்கொலை என்று தீர்ப்பளித்தார். (ம-287)

### மாண்டனர்

சியோல், ஆக. 11

தென் கொரியாவில் உஷ்ண நிலை அதிகரித்ததை அடுத்து நீச்சல் குளங்களையும் கடற்கரைகளையும் மக்கள் முற்றுகையிட்டதில் 18 பேர் மூழ்கி இறந்தனர்.


### விளம்பரத்தினால் வியாபாரம் பெருகும்

**தந்தி**
**சிறு விளம்பரங்கள்**

### வசியம்

காதலில் வெற்றியை எதிர்பார்ப்பவர்களுக்கு தவறாத மலையாளி வசிய பரிகாரம். மூன்று நாட்களில் பலன் கிடைக்கும். இருவரின் பெயர்களுடன் இலவச விபரங்களுக்கு எழுதுங்கள்: சிவபாலன், குப்த வித்தியாதனய, ஊருப்பொலை.

R. 69428


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பட்டப்பகலில் நடந்தது இந்த நாடகம்

# அம்மா, அண்ணை மன்றாட தன் காதலனுடன் ஓட்டம்!

### வீட்டுக்கு வர மறுத்த கன்னி இன்பபுரி நோக்கி பயணம்

**தாயார் மன்றுடினுர். அண்ணன் புத்திமதி கூறினுன்- ஆனுல் அந்தக் கட்டழகிக்கோ காதல் கண்களை மறைத்துவிட்டது. எதற்குமே அவள் மசியவில்லை- தனது காதலனுடன் ஒரு டாக்சியில் ஏறி மாயமாய் மறைந்து விட்டாள்!**

இந்த நாடகம் பட்டப் பகலில் தெஹிவலையில் உள்ள ஸ்டேசன் ரேட்டில் நடந்தது. இந்தக்காட்சி தனைப் பார்த்துப் பலர் மெய் மறந்து நின்றுவிட்டதால் போக்கு வரத்தே சில நிமிட நேரம் ஸ்தம்பித்துவிட்டது என்ருல் பார்த்துக் கொள்ளுங்களேன்!

காலி வீதியால் வேகமா ஓடி வந்த டாக்சி ஒன்று தெஹிவலை ஸ்டேசன் ரேட்டால் திரும்பியது.

இந்த டாக்சியின் பின்னுல்வந்த கார் ஒன்று திடீரென்று முன்னுல் வந்து வழிமறித்து நின்றது.

காரிலிருந்து குதித்து இறங்கிய ஒரு இளைஞனும், ஒரு நடுத்தர வயதுப் பெண்ணும், இந்த டாக்சியில் இருந்த ஒரு அழகிய இளம் பெண்ணை வெளியே இழுத்துத் தங்கள் காருக்குள் ஏற்றிச் கொண்டு செல்ல முயன்றனர்.

ஆனுல் அந்த இளம் பெண்ணே அதற்கு இணங்கவில்லை. சத்தம் போடத் தொடங்கிவிட்டாள். தாயார் மன்றுடினுர். அண்ணன் புத்திமதி கூறினுன்- ஆனுல் கன்னி அவளோ எதற்கும் மசியவில்லை. டாக்சியில் இருந்த தனது காதலனுடனேயே செல்வேன் எனப் பிடிவாதம் பிடித்தாள்.

இளம் பெண்ணின் காதலனைக் கூட அண்ணன்காரன் கேட்டுக் கொண்டான். அவனும் மசியவில்லை.

இந்த நாடகத்தைக் கண்டு ரசித்துக்கொண்டிருந்த வழிப் போக்கர்களும் புத்திமதி சொன்னுர்கள். ஆனுல் காதலால் கட்டுண்ட இரு இளம் உள்ளங்களும் எதற்குமே இணங்கவில்லை.

கூட்டத்தில் இருந்தவர்கள் அந்தத் தாயாரைப் பார்த்து "உடனே பொலீஸ் நிலையத்துக்குப் போய் இதுபற்றி முறையிடுங்கள்" என்ருர்கள். அதுதான் தருணம் என்று கருதிய அந்த இளம் ஜோடி டாக்சியில் ஏறி மாயமாய் மறைந்துவிட்டது.

அழுத கண்ணும் சிந்திய மூக்குமாக தாயார் தனது மகனுடன் பொலீஸ் நிலையத்துக்கு விரைந்தார். (ம)

### காதலனே வேண்டும் என இளங்குமரி பிடிவாதம்

நந்தாவதி என்னும் 14 வயது இளம் பெண்ணைக் கடத்தினுர் என்ற குற்றச்சாட்டின் பேரில் டி. எம். குணபால என்னும் வாலிபரை பதுளை குற்றப் பிரிவு பொலீஸ் இன்ஸ்பெக்டர் ஜனுப் சாகிப் பதுளை நீதிபதி திரு. டக்ளஸ் விஜேரட்ன முன்னிலையில் ஆஜர் செய்தார்.

பதுளையில் மாலைப் பாடசாலைக்குப் போவதாகச் சொல்லிச் சென்ற நந்தாவதியை நான்கு நாட்களாகக் காணவில்லை என்று பெண்ணின் தாயான டபிள்யூ. எம். புஞ்சி மெனிக்கா பதுளைப் பொலீசில் புகார் செய்திருந்தார்.

தாங்கள் இருவரும் விரும்பியே ரொக்கத்தன்னையில் ஒரு நண்பர் வீட்டில் கணவன்—மனைவி போல் இருந்து திரும்பியதாக இருவரும் தெரிவித்தனர். பெண் தன் தாயுடன் போக மறுக்கவே தெஹிவளை பெல்லங்வீலை பெண்கள் ரிமாண்டுக்கு பெண்ணை நீதிபதி அனுப்பினுர்.

வேறு திகதியில் வழக்கை விசாரிக்க ஒத்திவைத்தார் நீதவான். (ம-278)

### பிடவைக் கடையில் பலே திருடர்கள் பிடிபாடு

நாவலப்பிட்டி, ஆக. 11

விலை விசாரித்தார் ஒருவர். பொருட்களை பைக்குள் போட்டார் ஒருவர். இவர்கள் செய்கையில் சந்தேகம் ஏற்படவே கடைக்காரர் உடன் நடவடிக்கை எடுத்ததால் பலே திருடர்கள் பிடிபட்டனர்.

நாவலப்பிட்டி நகர பிடவை ஸ்தாபனமொன்றின் உள்ளே நுழைந்த புதுமுகங்கள் இருவரில் ஒருவர் கடைச் சிப்பந்தியிடம் பல பிடவைகளை காட்டி விலை விசாரித்துக்கொண்டிருக்கையில் மற்றவர் தான் கொணர்ந்த பைக்குள் பிடவை பீஸ் ஒன்றை நுழைத்தாராம். இதனை பார்த்துக்கொண்டிருந்த வாடிக்கையாளர் ஒருவர் இச் செயலை கடைக்காரருக்கு உணர்த்தியதால்திருடமுயன்ற இருவரும் வெளியே நழுவி ஓடினராம். பின்னர் பொலீசாருக்கு அறிவித்ததன் பேரில் மேற்படி திருடர்கள் பொலீசார் வசம் சிக்கினர். (ம-215)

### குற்றவாளிகளை மடக்க பொலீஸார் தீவிரம்

நீர்கொழும்பில் அண்மைக் காலங்களில் ஏற்பட்ட கொள்ளைச் சம்பவங்களுக்கு முடிவு கட்ட பொலீஸ் நிலைய பொறுப்பதிகாரி இன்ஸ்பெக்டர் எஸ். தவலிங்கம் தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறார்.

ஒரு சில நாட்களுக்குள் சுமார் ரூ 3000 பெறுமதியான களவு போன பொருட்களை நீர்கொழும்புப் பொலீசார் கைப்பற்றியுள்ளனர்.

பல காலமாக நடைபெற்று வந்த கொள்ளைச் சம்பவங்களில் சம்பந்தப்பட்ட ஐ. ஆர். சிக்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த ஒரு மாதத்தில் மாத்திரம் சுமார் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள், நீர்கொழும்பில் களவு போய் உள்ளதாக பொலீசார் தெரிவித்தனர்.

களவு போனவைகளில் ரேடியோக்கள், பேனைகள், கைக்கடிகாரங்கள் போன்றவையே முக்கியமானவை. அத்துடன் அநேக இடங்களில் பெண்களிடம் இருந்து கைக்கடிகாரங்கள் பறித்து எடுக்கப்பட்டுள்ளன. மார்க்கட், பஸ் நிலையங்களிலும் காடையர்களால் பொருட்கள் பறிக்கப்பட்ட சம்பவங்களும் நடைபெற்றுள்ளன.

நீர்கொழும்பில் குற்றங்களைக் குறைக்கும் முயற்சியில் இன்ஸ்பெக்டர் தவலிங்கம் தீவிரமாக ஈடுபட்டுள்ளார். (ம-15)

### காணி ஆக்கிரமிப்புக்கு இந்திரா பலத்த கண்டனம்

புதுடில்லி, ஆக. 11

அரசாங்கத்துக்கும், நிலப் பிரபுக்களுக்கும் சொந்தமான காணிகளைப் பறித்து ஏழைகளுக்கு வழங்குவது என்ற இடதுசாரிக் கட்சிகளின் போராட்டத்தை இந்தியப் பிரதமர் கண்டித்து உள்ளார்.

நாடு முழுவதிலும் நேற்று நூற்றுக்கணக்கான ஆர்ப்பாட்டக் காரர்கள் கைது செய்யப்பட்டனர். இதுவரை கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 6000க்கும் அதிகமாகும்.

காணிச் சீர்திருத்தங்களை அமுல் செய்வதில் தாமதம் ஏற்பட்டுள்ளது என்பதை ஒப்புக்கொண்ட பிரதம மந்திரி திருமதி இந்திரா காந்தி, "நிலப்பறிப்பு இயக்கம் சட்டத்துக்கு முரணானது, தேவையற்றது" என்றும் கண்டித்தார்.

நிலப்பறி இயக்கத்துக்காக கைது செய்யப்பட்டவர்களில் பலர் நாடாளுமன்ற உறுப்பினர்களும், மேல்சபை உறுப்பினர்களும் அடங்குவர்.

பம்பாயில் பிரஜா சோஷலிஸ கட்சி எம். பி.யான திரு. நாத்பாதிக்கும் வேறு 46 கட்சித் தொண்டர்களுக்கும் நீதிமன்றத்தில் 10 நாள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

மகாராஷ்டிர கவர்னரின் வாசஸ்தல காணிகளைக் கைப்பற்ற இவர்கள் பொலீஸ் தடையை மீறிய போதே கைது செய்யப்பட்டனர். (ம)


## பாரிசவாதம் அல்லது போலியோ

போன்ற கொடிய வியாதிகளையிட்டும் அநேக காலமாக பலவிதமான மருந்துகளை செய்தும் குணப்படாது மனம் வேதனை அடைந்து எவ்வளவு காலம் சென்ற கொடிய வாத நோய்களானுலும் சரியே. எங்கள் இராஜ வைத்திய அனுபவங்களின் மூலம் ஒரு லட்சத்துக்கு மேற் கொண்ட வியாதியஸ்தர்களை குணப்படுத்தி கைகண்ட

## பாரிசவாத தைலம்

கீழ்க் குறிப்பிட்ட வியாதியஸ்தர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம் — தங்களின் வியாதிகளுக்கு இன்றே உபயோகித்து பூரண சித்தியடையுங்கள். தீரும் வியாதிகள் சகல வகைப்பட்ட பாரிச வாதம், இளம்பிள்ளை வாதம், முடக்கு வாதம், நடுக்கு வாதம், பச்சை வாதம், பக்க வாதம், அண்ட வாதம், இடுப்பு வாதம், குடல் வாதம், நெஞ்சு அல்லது மாரடைப்பு, மொளிகளில் வீக்கம், கற்தழும்பு, குதிக்கால் நரம்புகள் வலி, வீக்கம், உடம்பில் பற்பல ஊரல்கள், சொறி சிரங்கு, அல்லது கட்டிகள், கடிவேகம், புழு மேய்ச்சல், உடம்பில் கரும் புள்ளிகள், வெள்ளை படருதல், சிறுவர்களுக்கு கைகால் உறுப்புகள் பலஹீனம், முடக்கம், சோர்வு, கழுத்து, முதுகந்தண்டு, இடுப்பு பலஹீனம், தசை கரைந்து, கணுக்குக்கு கணு வீக்கம், முடக்கம் போன்ற போலியோ நோய்களையும் மேற்படி மேலே குறிக்கப்பட்ட எவ்வித கடினமான நோய்களையும் ஏழு தினம் சிகிச்சையின் பின் குணம் காண்பீர்கள்:— சகல விபரங்களையும் மருந்துடன் அனுப்பி வைப்போம். நேரிலும் அல்லது வி. பி. பி. தபாலிலும் பெற்றுக் கொள்ளலாம்.

12 அவுன்ஸ் போத்தல் ஒன்றுக்கு ரூ. 100/-, 6 அவுன்ஸ் ரூ. 50/- 2 அவுன்ஸ் ரூ. 20/-, தபால் செலவு சதம் -/90,

## இழந்த சக்தியை மீண்டும் பெறுவதற்கு ரிஷி மன்மதன ஹல்வா

இன்றே சாப்பிடத் தவறாதீர்கள்

தெரிந்தும் தெரியாமலும் துர்ப்பழக்க வழக்கங்களில் ஈடுபட்டு தனது சக்தியை இழந்து அவதிப்படுவோர்களுக்கும் கொடிய கனவுகளால் தனது சக்தியை இழந்து இத்தன்மையான வகையில் நீர் வியாதிகள் ஏற்பட்டு நீர், சீனி போகுதல், மாவு, வெண்ணெய் போன்ற வகையில் வெளியாகி இளைப்பு, இருமல், சோகை, மூட்டு வலிகள், அல்லது வீக்கம் ஏற்பட்டு நரம்புத் தளர்ச்சியுண்டாகிய ஆண் - பெண் இரு சாரார்களுக்கும் இல்லற வாழ்க்கையில் வெறுப்பு ஏற்பட்டு உலகத்தில் ஜீவியம் செய்யவே விருப்பமில்லாமல் மனவேதனைப்படும் அன்பர்களுக்கு இதோ உங்களுக்குப் புத்துயிர் தந்து இன்புற்று வாழ எங்களின் ரிஷி மன்மதன ஹல்வாவை சாப்பிடுவீர்களானுல் ஆச்சரியப்படக்கூடிய வகையில் உங்கள் வாழ்க்கையை பிரதிபலிக்கச் செய்யும் ஓர் அற்புத சஞ்சீவி இந்த ரிஷி மன்மதன ஹல்வா.

30 நாள் மருந்து ரூ. 40/-, 15 நாள் மருந்து ரூ. 20/-

தபால் செலவு -/70 சதம்.

வி. பி. பி. தபாலில் பெற்றுக் கொள்ளலாம்.

கடந்த 787 ஆண்டுகளாக கண்டி பூர்வீக மன்னர்களுக்கும், பல லட்சக்கணக்கான வியாதியஸ்தர்களுக்கும் பரம்பரை பரம்பரையாகச் சிகிச்சை செய்து அளவற்ற பல நற்சாட்சிப் பத்திரங்கள் பெற்றுவரும் இராஜ வைத்தியர் வைத்தியரெத்தின முதலியார் அவர்கள் வகை.

**ஏ. எல். எம். ஜே. டி. உடையார்,**

வாத ரோக நிபுணர், இராஜ வைத்தியர்.

மடவலை பஜார், கண்டி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரத்தினபுரி டிப்போவில் திடீர் பரிசோதனை:

# பஸ் டிக்கட் இயந்திர மோசடி அம்பலமாகியது

### பூரண விசாரணை நடத்த இ. போ. ச. தலைவர் உத்தரவு

பஸ் டிக்கெட் இயந்திரங்களை மோசடியாக உபயோகித்ததாகக் கூறப்படும் புகாரை அடுத்து இரத்தினபுரி இ- போ- ச- டிப்போவில் விசாரணை நடாத்தப்பட்டது.

திட்டமிட்ட கோஷ்டி ஒன்று இந்த மோசடியைச் செய்ததாக நம்பப்படுகிறது.

தகவல் கிடைக்கப்பட்டதை அடுத்து திடீர் விசாரணைக் குழு ஒன்று மேற்படி பஸ் டிப்போவுக்கு விரைந்தது. அங்கே மோசடியாக உபயோகிக்கப்பட்டதாக நம்பப்படும் 52 பஸ் டிக்கெட் இயந்திரங்களை அவர்கள் சீல் வைத்துள்ளனர்.

சில கண்டக்டர்கள் கூட்டாக இந்த மோசடியைச் செய்ததாக தெரியவருகிறது.

இந்த மோசடியினால் கடந்த மூன்று மாதங்களில் 2 லட்சம் ரூபா வரை இ- போ. ச-வுக்கு நஷ்டம் ஏற்பட்டுள்ளது என நம்பப்படுகிறது.

இந்த மோசடி கண்டுபிடிக்கப்பட்ட பின்னர் மேற்படி டிப்போவில் மாத்திரம் தினசரி 2 ஆயிரம் ரூபா மேலதிக வருமானம் கிடைத்துள்ளதாம்.

இந்த மோசடிகள் பற்றி பூரண விசாரணை நடத்தும்படி இ- போ- ச- தலைவர் உத்தரவிட்டுள்ளார்.

### யோசனை

நான்கு வல்லரசுகளின் உச்சி மாநாடு கூட்டுவது பற்றி மேற்கு ஜெர்மன் தெரிவித்த யோசனை குறித்து அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் ஆகியவை கவனமாக ஆராய்ந்து வருகின்றன.

### மன்னார் தேர்தல் ஆட்சேப மனு பற்றிய விசாரணை

மன்னார் தேர்தல் ஆட்சேப மனு பற்றிய விசாரணை நீதியரசர் திரு. வி. டி. தாமோதரம் முன்னிலையில் நேற்று முன் தினம் ஆரம்பமாகியது.

தேர்தல் வழக்கு மனுதாரரால் வைக்கப்பட்டிருக்கும் கட்டுப் பணம் போதுமானதல்ல எனக் காரணம் காட்டி மன்னார் எம்- பி- திரு- வி-ஏ- அழகக்கோன் இந்த ஆட்சேப மனுவைத் தாக்கல் செய்திருந்தார்.

கடந்த பொதுத் தேர்தலில் மன்னார் தொகுதியில் போட்டியிட்ட ஐனப் செய்யது அப்துல் ரஹிம் என்பவரால் இத் தேர்தல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

திரு. அழகக்கோன் முதலாவது பிரதிவாதியாகவும் தேர்தலில் போட்டியிட்ட ஜனப் என். எம். எஸ். அப்துல்காதர் இரண்டாவது பிரதிவாதியாகவும் தேர்தல் அதிகாரியாகக் கடமையாற்றிய அரசாங்க அதிபர் திரு. எஸ். கதிர்காமநாதன் மூன்றுவது பிரதிவாதியாகவும் ஜனப் கே. அஸீஸ் மரிக்கார் நான்காவது பிரதிவாதியாகவும் திரு. கே. கே. வைத்திலிங்கம் ஐந்தாவது பிரதிவாதியாகவும் காட்டப்பட்டுள்ளனர்.

"வாக்குகள் தவறுதலாக எண்ணப்பட்டுள்ளன, தேர்தலில் முறையற்ற செல்வாக்கு பிரயோகிக்கப்பட்டுள்ளது, மனுதாரரின் தனிப்பட்ட வாழ்க்கையைச் சம்பந்தப்படுத்தி தவறுதலாக பேசப்பட்டுள்ளது" என்று மனுதாரர் தனது வழக்கில் குற்றஞ்சாட்டியுள்ளார்.

தேர்தல் வழக்குகளில், மனுதாரரால் வைக்கப்பட வேண்டிய கட்டுப்பணம் பற்றிய 1970-ம் ஆண்டின் 12-வது சட்டம் பற்றி திரு. அழகக்கோனின் வழக்கறிஞர் திரு. எம்- திருச்செல்வம் (கியூ. சி.) எடுத்துரைத்தார். (ம)

### தோட்ட மக்களின் ஆதரவு அரசுக்கு என்றும் உண்டு

"இந் நாட்டை ஒரு ஜனநாயக சோஷலிசக் குடியரசாக்குவதற்கான சகல முயற்சிகளையும் ஐக்கிய முன்னணி அரசு செய்து வருகிறது. அதற்குத் தோட்டத் தொழிலாளர் பூரண ஒத்துழைப்பு நல்கி வருகின்றனரென்பது மகிழ்ச்சிக்குரிய விஷயமாகும்."

ஐ- தொ- கா- தலைவரும் நியமன எம்- பி-யுமான ஜனப் ஏ- அஸீஸ் இரத்தினபுரி ஐ. தொ. கா- மாவட்டக் காரியாலயத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினர்.

"ஒரு சோஷலிச ஜனநாயகத்தின் குறிக்கோள்களை நிலைநாட்டுவதற்கு, உறுதிபூண்ட சுயேட்சையான, தனியாட்சியான, சுதந்திரமானதொரு குடியரசாக இலங்கையைப் பிரகடனப்படுத்தும் ஒரு புதிய அரசியலமைப்பை நாம் விரைவில் காணப்போகின்றேம். அத்தகைய, அதற்கு முன்னேடியாக நமது அரசு பல நல்ல காரியங்களைச் செய்துள்ளது.

"இஸ்ரவேலுடன் தன் உறவைத் துண்டித்தமையையிட்டு ஐ- தொ. கா- பெருமகிழ்ச்சி அடைகிறது. தோட்டத் தொழிலாளர்களின் பிரச்சினைகள் இந் நாட்டில் வாழ் ஏனைய தொழிலாளர்களோடு பின்னிப் பிணைக்கப்பட்டுள்ளது. அவர்களைத் தனியே பிரிக்க முடியாது என்பதை ஐக்கிய முன்னணி அரசு தெளிவாக உணர்ந்துள்ளது." — என்றும் ஜனப் அஸீஸ் கூறினர். (ம)

### கைதிகள் பரிமாற்றம் கிடையாது

கெய்ரோ, ஆக. 11

எகிப்தினல் கைப்பற்றப்பட்ட இஸ்ரவேல் விமானிகள் தற்போதைய யுத்த நிறுத்தத்தின் போது விடுவிக்கப்பட மாட்டார்கள்.

உத்தியோக பூர்வ அல் — அஹ்ரம் பத்திரிகை இத்தகவலை அறிவித்துள்ளது.

இஸ்ரவேல், எகிப்து, ஜோர்தான் ஆகிய நாடுகளுக்கிடையில் மறைமுகப் பேச்சு வார்த்தைக்கு வழிவகுக்கும் டாக்டர் குன்னர் ஜாரிங், கைதிகள் பரிமாற்றத்துக்கு வழிவகுக்கலாம் என இஸ்ரவேல் அதிகாரிகள் நம்புவதாகத் தெரிவிக்கும் தகவல்கள் பற்றி குறிப்பிடுகையிலேயே அப்பத்திரிகை இவ்வாறு தெரிவித்துள்ளது.

### பீலிக்ஸின் அறிக்கைக்கு யு. என். பி. பலத்த கண்டனம்

"நாடாளுமன்றத்தின் (மூதவை உட்பட) உள்ளும் புறமும் சுதந்திரமான கருத்துக்களைத் தெரிவிக்கவும், தேவை ஏற்படின் அரசாங்கத்தின் முடிவை பயமின்றி எதிர்க்கவும் ஜனநாயக நாட்டில் உரிமை உண்டு" என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்றக் குழு பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் வலியுறுத்தி உள்ளது.

இக் குழுக் கூட்டம் நேற்று நடைபெற்றது.

"இலங்கை அரசியல் சட்டத் திருத்த மசோதாவை மூதவையில் உள்ள 13 செனட்டர்கள் எதிர்த்து வாக்களித்து தோற்கடித்தனர். இதற்காக அந்த செனட்டர்களைப் பயமுறுத்துவது போல் பொது நிர்வாக, உள்ளூராட்சி, உள் நாட்டு அமைச்சர் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயகா பத்திரிகைகளுக்கு அறிக்கை விடுத்துள்ளார்.

"அமைச்சரின் இந்த நடவடிக்கையை எமது குழு வெகுவாகக் கண்டிக்கிறது. அமைச்சர் அறிக்கை விடுவதோடு மட்டும் அல்லாமல், மூதவையை ஒழிக்க வேண்டும் என்று கோஷம் எழுப்புவதற்கு உள்ளூராட்சி மன்றங்களையும் தூண்டி விட்டுள்ளார். மசோதாவை எதிர்த்த செனட்டர்கள் மீது மக்கள் பலாத்காரம் பிரயோகிக்கும் செய்கைகளுக்கும் தூபமிடுகிருர்" என்றும் இந்த அறிக்கைகளில் குறிப்பிட்டுள்ளது. (ம)

### இரத்த வெள்ளத்தில் ஜயசேன மிதந்தார்!

"ஜயசேன பொரலஸ்ஸ என் சகோதரி குசுமாவதியைத் திருமணஞ் செய்யவிருந்தார். சம்பவம் நடைபெறுவதற்கு 11 மாதங்களுக்கு முன் எமது வீட்டில் வசிப்பதற்கு வந்தார். முன் அறையில் தங்கினர். இச் சம்பவம் நள்ளிரவில் நடைபெற்றது. நான் எழுந்து பார்த்தபோது ஜயசேன கட்டிலில் இரத்த வெள்ளத்தில் கிடந்தார்."

கொலை முயற்சி வழக்கொன்றில் சாட்சியம் அளித்த கே. டி. தயாவதி (13 வயது) மேற்கண்டவாறு கூறினர்.

கொழும்பு மேலதிக நீதவான் முன்னிலையில் விசாரிக்கப்பட்ட இவ் வழக்கில் தலங்கமை தெற்கைச் சேர்ந்த கே. டொன் பொபேட் சிங்கோ குற்றஞ்சாட்டப்பட்டவர் ஆவார்.

ஜயசேன பொரலஸ்ஸைக்கு கடுங்காயம் விளைவித்ததாகவும், சோமாவதி (மனைவி), பத்மாவதி (மகள்) ஆகியோரை 1968 அக்டோபர் 31-ந் திகதி மன்னைக் கத்தியால் வெட்டியதாகவும் எதிரி குற்றஞ்சாட்டப்பட்டு உள்ளார்.

தயாவதி மேலும் சாட்சியம் அளிக்கையில் கூறியதாவது:-

"சம்பவம் நடந்த அன்று விளக்கு எரியவில்லை. பத்மாவதி ஒரு அறையிலும், தாயார் வேறு ஒரு அறையிலும் படுத்திருந்தனர். ஜயசேன அலறியதைக் கேட்டு எழுந்து வந்தேன். அம்மாவும் வந்தார். ஜயசேனவை அடுத்து என் அம்மாவையும் எனது தகப்பனர் பல முறை வெட்டினர். நான் அம்மாவின் அறை வாசலில் நின்று கவனித்தேன். தகப்பனர் கையில் டோர்ச்லைட் வைத்திருந்தபடியால் அவரை அடையாளம் கண்டுபிடித்தேன்" என்று கூறினர்.

மேல் விசாரணை செப்டம்பர் மாதம் 16-ந் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (ம-15)

### மீண்டும் உறுதி வேண்டுமாம்

ஜெரூஸலம், ஆக. 11

அமெரிக்க சமாதானத் திட்டத்தை ஏற்று கையாள்வதில் ஏற்பட்டிருக்கும் அதிருப்தியைப் போக்க புதிதாக உறுதியளிக்கும்படியும் விளக்கப்படுத்தும்படியும் இஸ்ரவேல், அமெரிக்காவை கேட்கவிருக்கிறது.

பாது காப்புச் சபைக்கான தனது அறிக்கை சமர்ப்பிக்கும் திட்டத்தில் இஸ்ரவேல் பிரதிநிதிகளைச் சேர்த்துக் கொள்ள ஐ. நா. பொதுக் காரியதரிசி தவறியது குறித்து இஸ்ரவேல் அதிகாரிகள் ஆத்திரமடைந்துள்ளனர்.

அவசர ஆலோசனைக்காக அழைக்கப்பட்ட வாஷிங்டனில் இருக்கும் இஸ்ரவேல் தூதுவர் லெப்டினன் ஜெனரல் ருபின் இன்று வாஷிங்டனுக்குத் திரும்பிச் செல்வார்.

படைகள் வாபஸ் சம்பந்தமாக அவர் இஸ்ரவேலின் நிலையை வாஷிங்டன் அதிகாரிகளிடம் வலியுறுத்துவார் என எதிர்பார்க்கப் படுகிறது.


## கோபால் பல்பொடி

பற்களுக்கு வெண்மை தந்து பல் வியாதிகளைக் குணப்படுத்துகிறது. இந்தியாவிலும் இலங்கையிலும் விற்கப்படுகிறது.

**S. P. S. ஜெயம் அன் கோ.**

மதுரை - கொழும்பு.

விற்குமிடம்:-

34, செட்டியார் தெரு, கொழும்பு - 11.

தபால் பெட்டி: 1298.
தொலைபேசி எண்: 26584






இப்பத்திரிகையை அச்சிட்டவர், சுயாதீனப் பத்திரிகா சமாஜம், 5, குணசேன மாவத்தை, கொழும்பு—12, (இலங்கை). வெளியிட்ட திகதி 12 ஆகஸ்ட் 1970.
Thanthi 5, Gunasena Mawatha, Colombo 12.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org